பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 222

திங்கட்கிழமை
07 ஜுலை 2025

ஆனி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



## வடக்கு ரயில் சேவை நேரங்களில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 7
வடக்கு ரயில் சேவை நேர அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. வார இறுதி நாள்களில் மட்டுமே இயக் (தொடர்ச்சி 11)

# செம்மணிப்புதைகுழியில் அகழ அகழ என்புக்கூடுகள்

## நேற்றும் இரு என்புத் தொகுதிகள் கண்டுபிடிப்பு
## இதுவரை 47 என்புத் தொகுதிகள் அடையாளம்

**யாழ்ப்பாணம், ஜூலை 7**

**செம்மணி, சித்துப்பாத்தி மயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியில் மேற்கொள்ளப்படும் அகழ்வு நடவடிக்கைகளில் நேற்றும் இரு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணியில் பெரும் மனிதப் புதைகுழி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலையில், இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் 47 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.** (தொடர்ச்சி 11)



## துப்புரவு நடவடிக்கையில் வெளித்தெரிந்த என்புகள்

### செம்மணியில் அடுத்தடுத்து அதிர்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 7
செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அதற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவாக்கல் பணியின்போது மேலும் சில மனித என்பு (தொடர்ச்சி 11)

## சாதக நிலையை எட்டியது அமெ. வரிவிலக்குப் பேச்சு

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 7
இலங்கை மீதான அமெரிக்காவின் வரிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் சாதக நிலையை எட்டியுள்ளன என்று வர்த்தக அமைச்சர் வசந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.
அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு அதிக வரிகளை விதிக்கும் நாடுகளுக்கு பரஸ்பர வரியை விதிக்க (தொடர்ச்சி 11)

## இனியபாரதி கைது



விரிவு பக்கம்:- 05

## தூசு தட்டப்படும் முறைப்பாடுகள்

### அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு ஆப்பு

கொழும்பு, ஜூலை 7
அரசியல்வாதிகளுக்கு எதிராக கடந்த காலங்களில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை செய்யப்படாமல் கிடப்பில் போடப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.
பொலிஸ் நிலையங்கள், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு, நிதிக் குற்ற விசாரணைப் (தொடர்ச்சி 11)




## போதைப்பொருள் கடத்தல்கள் 30,000 வழக்குகள் தாக்கல்!

விரிவு பக்கம்:- 02

'ஏது குறைஞ்சாலும் இஞ்ச புதைகுழிக்கும் போதைப்பொருளுக்கும் குறைவில்லை கண்டியளோ'

## ஐ.எம்.எப். உதவியின் கீழ் இதுவரை 1.74 பில். டொலர்

கொழும்பு, ஜூலை 7
சர்வதேச நாணய நிதியம் இதுவரை இலங்கைக்கு 1.74 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது என்று அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கபில சேனநாயக்க தெரிவித்துள்ளார்.
சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கோரிய கடன் தொகை 9 தவணைகளில் பெறப்படவுள்ளது. அவற்றில் 5 தவணைகள் ஏற்கனவே (தொடர்ச்சி 11)

## ஐ.எம்.எப். திட்டத்தின் தூணாக 2026 "பட்ஜெட்"

### இலங்கைக்கான செயற்றிட்டப் பிரதானி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7
சர்வதேச நாணய நிதியத்தால் அனுசரணை அளிக்கப்படும் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின் மிக முக்கியமான தூணாக இலங்கையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அமையும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்றிட்டப் பிரதானி எவான் பபஜோர்ஜியோ தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி 11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 06.07.2025 | திகதி 06.07.2025 | திகதி 06.07.2025 | திகதி 06.07.2025 | திகதி 06.07.2025 | திகதி 06.07.2025 | திகதி 06.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4124 | சீட்டிழுப்பு இலக்கம் 1191 | சீட்டிழுப்பு இலக்கம் 0150 | சீட்டிழுப்பு இலக்கம் 2230 | சீட்டிழுப்பு இலக்கம் 5882 | சீட்டிழுப்பு இலக்கம் 1912 | சீட்டிழுப்பு இலக்கம் 0457 |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கினம் மகரம் | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து Z | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து Z |
| | | | சுப்பர் இலக்கம் 19 | | | |
| வெற்றி இலக்கங்கள் 09 24 31 49 | வெற்றி இலக்கங்கள் 04 23 33 53 | வெற்றி இலக்கங்கள் 1 2 7 9 | வெற்றி இலக்கங்கள் 01 10 47 70 | வெற்றி இலக்கங்கள் 8 2 7 6 5 5 | வெற்றி இலக்கங்கள் 09 42 47 53 | வெற்றி இலக்கங்கள் 7 6 5 5 |
| விசேட எழுத்து J | | | | | விசேட எழுத்து D | |

# ஈழத்தமிழர்பட்ட அவலத்தின் சாட்சியே செம்மணிப் புதைகுழி

## மனோ எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜுலை 7**

**ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட அவலத்தின் அடையாளமே செம்மணிப் புதைகுழி. அப்பாவி மக்கள் கொன்று புதைக்கப்பட்டதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இது மனித உரிமை மீறலாகும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

தனியார் வானொலியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவம், அரச பயங்கரவாதம், பேரினவாத அடக்குமுறை, எதேச்சாதிகாரம், போர் வெற்றி என்பவற்றால் நடந்தது தான் செம்மணிப் புதைகுழி. அங்கே இருப்பது எம்மவர்களின் எலும்புக்கூடுகள்.

அப்பாவி மக்களைக் கொலை செய்வது, பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்துவது போன்ற செயல்கள் ஏற்க முடியாதவை. இவை மனித உரிமைமீறல்கள். போர் முடிந்தாலும் போர் ஏற்படுவதற்கு வழி சமைத்த பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

எனவே, அதிகாரப்பகிர்வின் அவசியத்தை அமைச்சர் சந்திரசேகர் எடுத்துரைக்கவேண்டும் - என்றார். (ச-44)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | H | 3 7 9 5 2 1 | 0590 |

## Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2856 | L | 10 24 29 34 |

## சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | N | 21 46 72 75 | 5017 |

## SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0720 | 17 20 44 |

## லக்ன ராசி

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | | 14 18 37 44 | 4568 |

## KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | C | 22 | 45 60 65 66 | 2032 |

## அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | O | 01 27 53 73 | 2682 |

# புதிய அரசியலமைப்பு; அரசுக்கு இயலுமையில்லை

கொழும்பு, ஜுலை 7

புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் இயலுமை இந்த அரசாங்கத்துக்குக் கிடையாது என்று முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையடைந்த நாட்டைத்தான் நாங்கள் பொறுப்பேற்றோம். பொருளாதார மீட்சிக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த கடுமையான தீர்மானங்களினால்தான் நிதி வங்குரோத்து நிலையில் இருந்து நாடு குறுகிய காலத்துக்குள் மீட்சிபெற்றது.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பல சட்டமூலங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் அதற்கான பணிகள் விரிவாக ஆராயப்பட வேண்டும். அதற்கு நீண்டதொரு காலம் தேவைப்படும். இந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காது என்பது தெளிவாகத் தோன்றுகிறது. ஆரம்பகட்டப் பணிகளைத் தற்போது ஆரம்பித்தால் இரண்டு ஆண்டுக்குள் யாப்பினை உருவாக்கமுடியும் - என்றார். (ச-இ)

# புதிய எதிரணி உதயம் பேச்சுகள் ஆரம்பம்

கொழும்பு, ஜுலை 7

புதியதொரு பொது எதிரணிக் கூட்டணியைக் கட்டியெழுப்புவதற்குரிய ஏற்பாடுகள் அரசியல் களத்தில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்று தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி ,சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மொட்டுக்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளே இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இப்போது உத்தியோகபூர்வமற்ற முறையில் இந்தப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் உத்தியோகபூர்வமானமுறையில் வெளிப்படையாக பேச்சுகள் இடம்பெறும் என்றும் கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எதிரணிகளை ஓரணியில் திரட்டுவதே புதிய கூட்டணியின் பிரதான நோக்கமாகும்.

இந்தக் கட்சிகள் மூன்றும் சேர்ந்து புதிய கட்சியைத் தொடங்கினால் மக்களைத் தம் பக்கம் இழுப்பது இலகு என்று அக்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றனர். (ச-44)

# மீண்டும் தூசுதட்டப்படும் பிணைமுறி மோசடிகள்


கொழும்பு, ஜுலை 7

நல்லாட்சி அரசில் இடம்பெற்ற பிணைமுறி மோசடியில் இருந்து குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காக அந்த மோசடியில் ஈடுபட்ட மதுபான நிறுவன முதலாளியிடமிருந்து கோடிக்கணக்கில் பணம் உள்ளிட்ட சலுகைகள் பலவற்றை இலஞ்சமாகப் பெற்ற முன்னாள் மற்றும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமிக்கப்பட்ட நிலையில் இந்த மோசடிக்குற்றங்கள் மீண்டும் தூசுதட்டப்பட்டு விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆரம்பத்தில் பிணைமுறி மோசடியைக் கடுமையாக விமர்சித்து அதற்கு எதிராகச் செயற்பட்டவர்கள். பின்னர் குறித்த மதுபான நிறுவனம் அவர்களுக்கு கோடிக்கணக்கில் பணமும் சில சலுகைகளும் வழங்கி அவர்களின் வாயை அடைத்தது என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிணைமுறி மோசடி தொடர்பில் முதன்முதலாக விசாரணை நடத்தியவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர என்பது குறிப்பிடத்தக்கது. (ச-75)



# போதைப்பொருள் கடத்தல்கள் 30,000 வழக்குகள் தாக்கல்!

கொழும்பு, ஜுலை 7

இலங்கையில் போதைப்பொருள் கடத்தல்களுக்கு எதிராக 30 ஆயிரத்துக்கும் அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி, மொத்தம் 31 ஆயிரத்து 209 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் ஐஸ் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் 10 ஆயிரத்து 912 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஹெரோய்ன் கடத்தல் தொடர்பில் 9 ஆயிரத்து 300 வழக்குகளும், கஞ்சாக் கடத்தல் தொடர்பாக 9 ஆயிரத்து 476 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மூலோபாய நகர்வு; சிக்கிக்கொள்ளும் இலங்கை?

## நிபுணர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 7**

**இந்திய அரசுக்குச் சொந்தமான 'மசாகன் டாக் ஷிப் பில்டர்ஸ்' எனும் நிறுவனம் இலங்கை டொக் யார்ட் நிறுவனத்தின் 50 வீத பங்குகளைப் பெற்றுள்ளதால் கொழும்பு துறைமுகம் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் என்று பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இது 52.96 மில்லியன் மதிப்பிலான ஒரு ஒப்பந்தமாகும். டொக் யார்ட் நிறுவனத்தின் 50 வீத பங்குகளைப் பெறுவதன் மூலம் இந்திய நிறுவனம் தனது ஆதிக்கத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் முதல் சர்வதேச கையகப்படுத்தலாக அமைகிறது. இந்தியப் பெருங்கடற்பகுதியில் தனது செல்வாக்கையும் கடல்சார் திறனையும் அதிகரிக்க இந்தியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் இந்தியாவின் ஒரு பகுதியாகவும் பார்க்கப்படுகிறது. சீனாவின் அம்பாந்தோட்டைத் துறைமுக முதலீடுகளுக்குப் பிறகு, இந்தியா தனது இருப்பை இலங்கையின் கடல்சார் உட்கட்டமைப்பில் வலுப்படுத்த முயல்கிறது. அந்தவகையில், இலங்கை, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான புவிசார் அரசியல் சமநிலையில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வருவதுடன் இலங்கை ஒரு இக்கட்டான நிலைக்கும் தள்ளப்படலாம்- என்றனர்.

இதேவேளை இந்தியப் பாதுகாப்பு அமைச்சகத்துடன் தொடர்புடைய மசாகன் டாக் ஷிப் பில்டர்ஸ் நிறுவனம், இந்தியக் கடற்படைக்காகப் போர்க் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிக்கும் பிரதான பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-75)

## அவிசாவளையில் துப்பாக்கிச்சூடு; சிறுமி உட்பட மூவர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 7

அவிசாவளை கொஸ்கமப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 12 வயது சிறுமி உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

தாய், மகள் மற்றும் மற்றொருவர் ஆகியோரே இந்தத் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த மூவரும் முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது, மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கொஸ்கமப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)


## 15ஆம் திகதிக்குள் சா/த பெறுபேறுகள்

கொழும்பு, ஜூலை 7

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்றும், விடைத்தாள் திருத்தும் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முடிவுகள் வெளியிடப்பட்டதும், பரீட்சாத்திகள் தங்கள் முடிவுகளைப் பின்வரும் அதிகாரபூர்வ வலைத்தளங்களான http://www.doenets.lk மற்றும் http://www.results.exams.gov.lk ஆகியவை வழியாக ஒன்லைனில் பார்வையிட முடியும்.

முடிவுகளை அணுக, பரீட்சாத்திகள் தங்கள் பரீட்சைக் குறியீட்டு இலக்கங்களை இரண்டு தளங்களிலும் உள்ளிட்டு முடிவுகளைப் பார்வையிடமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## இலங்கைக்கான ஆஸி. தூதுவராக மேத்யூ டக்வொர்த்

கொழும்பு, ஜூலை 7

இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் அடுத்த உயர்ஸ்தானிகராக மேத்யூ டக்வொர்த் நியமிக்கப்பட்டுள்ளார் என அவுஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

மேத்யூ டக்வொர்த், வெளிநாட்டு மற்றும் வர்த்தகத் துறையில் வல்லுநராகத் திகழ்வதோடு, அண்மையில் அமெரிக்க வர்த்தகப் பணிக்குழுவின் உதவி செயலாளராகவும், அவுஸ்திரேலியா-ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் துணைத் தலைமைப் பேச்சு வார்த்தையாளர் என்ற பதவியிலும் பணியாற்றியவர் ஆவார். (ச-இ)

## விபத்துத் தடுப்பு வாரம் இன்றுமுதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 7

தேசிய விபத்துத் தடுப்பு வாரம் இன்று முதல் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை செயற்படுத்தப்படவுள்ளது.

இன்று வீதி விபத்துத் தடுப்பு நாளாகவும், நாளை 8 ஆம் திகதி பணியிட விபத்து தடுப்பு நாளாகவும், நாளை மறுதினம் 9 ஆம் திகதி வீடு மற்றும் முதியோர் இல்ல விபத்துத் தடுப்பு நாளாகவும், ஜூலை 10ஆம் திகதி நீரில் மூழ்கும் விபத்துகளைத் தடுக்கும் நாளாகவும், ஜூலை 11 ஆம் திகதி பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் பகல் நேரப் பராமரிப்பு மையங்களில் விபத்துகளைத் தடுப்பதற்கான நாளாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், விபத்துத் தடுப்புக் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-இ)




## குளத்தளவே ஆகுமாம் கொள்ளை

இண்டைக்கும் ஒரு குட்டிக்கதையோட விசயத்தைச் சொன்னால்தான் வடிவா விளங்கும். இலங்கையின்ர மன்னாரில இருந்து இஞ்சினியர் ஒருத்தர் லண்டனுக்குப் போயிருக்கிறார். அங்க அவரோட கம்பஸில படிச்ச இன்னொரு இஞ்சினியரான வெள்ளைக்காரச் சிநேகிதனையும் ஒருக்கா எட்டிப்பார்த்திருக்கிறார். பார்த்தவர் ஏங்கிப் போனார். அவ்வளவு வசதி அந்த வெள்ளைக்கார இஞ்சினியர் வீட்டில. "என்னெண்டடாப்பா இப்பிடிப் பணக்காரனா வந்தனீ?" எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு வெள்ளைக்கார இஞ்சினியர் "அங்கபார் தேம்ஸ் நதியில ஒரு பாலம் தெரியுதெல்லோ. அதை நான்தான் கட்டினன். அதில உழைச்சுத்தான் இந்த வீட்டைக் கட்டினன்" எண்டிருக்கிறார். இலங்கை இஞ்சினியரும் அவரைப்பார்த்து பாராட்டிப்போட்டு நாட்டுக்கு வந்திட்டார்.

பிறகொருக்கா அந்த வெள்ளைக்கார இஞ்சினியர் மன்னாரில இருக்கிற இஞ்சினியர் வீட்டை வந்திருக்கிறார். அங்க வெள்ளைக்காரரின்ர வீட்டைவிட பெரிசா, வசதி கூடினதா மன்னார் இஞ்சினியர் இருந்திருக்கிறார். "நீ என்னெண்டடாப்பா இப்பிடி உழைச்சனீ?" எண்டு ஆச்சரியத்தோட கேட்டிருக்கிறார். உடன மன்னார் இஞ்சினியர் "அங்கபார் தலைமன்னாருக்கும் இந்தியாவுக்கும் இடையில ஒரு பாலம் இருக்கு. அதைக்கட்டித்தான் இப்பிடி உழைச்சன் எண்டிருக்கிறார். வெள்ளைக்காரர் பூதக்கண்ணாடி வைச்சுப் பார்த்தும் மன்னார் இஞ்சினியர் சொன்ன பாலத்தைக் காணவேயில்லை." என்னடா பாலத்தையே காணேலையே எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு மன்னார் இஞ்சினியர் பாலத்தைக் கட்டிறதுதான் எங்கட வேலை. அது இருக்கோ இல்லையோ எண்டு கண்டுபிடிக்கிறது விஞ்ஞானியளின்ர வேலையெல்லோ எண்டு சிரிச்சிருக்கிறார். கட்டாத பாலத்தை கட்டினதாகக் காட்டி தன்ர சிநேகிதன் காசடிச்சுப் போட்டார் எண்டது அப்பதான் வெள்ளைக்கார இஞ்சினியருக்கு விளங்கிச்சாம்.

இப்ப ஏன் இந்தக் கதையெண்டால், இதே மன்னாரில 42 குளங்களைத் தூர்வாருறம், அணை கட்டுறம், தூரிசு கட்டுறம், அலை வெட்டுறம் எண்டு கோடிக்கணக்கான காசை கொஞ்சப்பேர் சுருட்டியிருக்கினம். அதுவும் சாதாரண ஆக்களில்லையாம். பெரும் மட்டங்களில இருக்கிற ஆக்கள்தான் இப்பிடி கூட்டுச்சேர்ந்து கொள்ளையடிச்சிருக்கினம். 2012 ஆம் ஆண்டில இருந்து 2019ஆம் ஆண்டு வரைக்கும் இந்தக் கொள்ளையடிப்பு நடந்திருக்குது. கமநலத் திணைக்களத்துக்கு கீழ வாற குளங்களைத்தான் இப்பிடித் திருத்திறம் எண்டு சொல்லிப்போட்டு, அந்தக் குளங்கள் இருக்கிற பக்கமே எட்டிப்பாக்காமல் , இஞ்சினியர்மார் சிலரும், அதிகாரியள் சிலரும் கூட்டுச்சேர்ந்து இப்பிடியொரு கள்ளவேலை செய்திருக்கினமாம். இப்ப அதைப்பற்றி விசாரணையள் தொடங்கின உடன கள்ளனுக்குத் தேள் கொட்டினமாதிரி அதில சம்பந்தப்பட்டவை முழிக்கினமாம். அதோட இந்த விசாரணையை நிப்பாட்டுறதுக்கு அவையள் எல்லா இடமும் ஓடியாடியும் திரியினமாம். ஊழலுக்கு எதிரான ஆக்கள் எண்டு சொல்லுற உந்த அரசாங்கம், குளங்களைத் திருத்தாமலேயே திருத்திட்டம் எண்டு காசடிச்சவையை என்ன செய்யப் போகுது எண்டு பாப்பம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 12 . 1942



மறைவு 06 . 07 . 2025

## ஆபிரகாம் இம்மானுவேல்

(ஓய்வு நிலை ஆய்வுக்கூட உதவி உத்தியோகத்தர்-பண்ணை யாழ்ப்பாணம்)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், இத்தாவில், பளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆபிரகாம் இமானுவேல் அவர்கள் நேற்று (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆபிரகாம்-கிறிஸ்ரீனா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை-லோறன்சியா தம்பதியின் அன்பு மருமகனும் மாக்கிறெற்றம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பதுவைநாயகம், லூர்த்தம்மா, சலேற்றம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற லூர்த்துமலர், அல்பிரட், கொலஸ்ரிக்கம்மா, செல்வராசா மற்றும் அருட்சகோதரி மேரி ஜெயசீலி, அருட்சகோதரி மேரி பெர்சனதேத், மனோகரசீலி, ஜோர்ஜ், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இத்தாவில் உள்ள அவரது இல்லத்தினின்று எடுத்துச் செல்லப்பட்டு, இறுதி இரங்கற் திருப்பலி இன்று (07.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புனித பார்பரம்மா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு இத்தாவில் புனித பார்பரம்மா ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**மாக்கிறேற்றம்மா**
**076 246 6249, 077 735 3630**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# புல்லாவெளி செபஸ்தியார் ஆடிமாதத் திருவிழா



யாழ்ப்பாணம், ஜுலை 7

குருநகர் பங்குமக்களால் சிறப்பிக்கப்படும் யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பங்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய ஆடிமாதத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

திருவிழாத் திருப்பலியானது கட்டைக்காட்டுப் பங்குத் தந்தை வணபிதா அமல்ராஜ் தலைமையில் ஆரம்பமாகி அருட்தந்தை ஜெபரன்சன், அருட்தந்தை யாவிஸ், அருட்தந்தை அலவன்ராஜ சிங்கன் அமலமரித்தியாகிகள், பாதர் றொகான் ஆகியோரால் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து புனித செபஸ்தியாரின் திருச்சொரூபப் பவனி இடம் பெற்று பின்னர் செபஸ்தியாரின் ஆசீர்வாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

(ச-41-113)

**Angel International School, Manipay**

**VACANCY**

**Driver / சாரதி**


**Requirements**

* சாரதி அனுமதிப்பத்திரம் (பாரவூர்தி) உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை: 35 - 55
* ஆகக்குறைந்தது 02 வருட அனுபவம்.
* நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

Further Details: Mr. Jeevan: 077 844 8020

Angel International School, Mathers Lane, Manipay

# மரண அறிவித்தல்



மண்ணுலகில் 18.09.1968

விண்ணுலகில் 06.07.2025

## அருள்ராசா துரைசிங்கம் (பீற்றர்)

கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் றக்கா வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அருள்ராசா துரைசிங்கம் அவர்கள் நேற்று (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம் - லீலா தம்பதியினரின் அன்பு மகனும், குணசிங்கம் (தவா - பிரான்ஸ்), யேசுதாசன் (பாலன்), காலஞ்சென்ற மாசில்லா (ரூபி) ஆகியோரின் சகோதரரும், ராசாத்தி (பிரான்ஸ்), ராஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், டென்சி - இருதி, டயானி - கமல் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிசாந்தன், நிறோஜினி - கிரிதரன், லக்சனா - பிரசீலன், டர்சிகா, மயூரிகா, நர்மிலன், எனோச், யூலியன் ஆகியோரின் சித்தப்பாவும், சேர்ஜியஸ், அத்விகன், அத்விகா, திதிசா, சஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (08.07.2025) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்து செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயம் சுண்டுக்குளியில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனை தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**58/02**
**றக்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**டென்சி (மருமகள்)**
**077 063 5012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

வெல்வோம், சாதிப்போம், வேதனைகளைத் துடைத்தெறிவோம்
எந்தை அருளால் எதுவும் வசமாகும்.
– அப்துல் கலாம்–

## செம்மணியைப் பேசுபொருளாக்குவோம்

'செம்மணிப் புதைகுழிக்கு நீதிவேண்டும்' என்ற குரல்கள் இலங்கையைத் தாண்டி சர்வதேச அளவில் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன. கடந்த ஒரு வாரத்துக்குள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், அமெரிக்க செனற் பிரதிநிதி, பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர், கனடாவின் ஒன்ராறியோ மாகாண அமைச்சர் மற்றும் தமிழகத்தின் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் ஆகிய தலைவர்கள் செம்மணிப் புதைகுழியை சர்வதேச அளவில் பேசுபொருளாக மாற்றியிருக்கின்றனர். இவர்களின் கருத்துகள் மற்றும் வலியுறுத்தல்களுக்கு மேலதிகமாக, தமிழகம், பிரிட்டன், கனடா ஆகிய இடங்களில் செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

செம்மணிப் புதைகுழியென்பது சாதாரணமானதொரு விடயமல்ல. அதற்குள் இருந்து மீட்கப்பட்டு வரும் ஒவ்வொரு மனிதக்கூடுகளும் ஓராயிரம் கதைகள் கொண்டவை. குழந்தைகளின் பொம்மைகள், பாடசாலைப் பைகள், கண்ணாடி வளையல்கள், பாதணிகள் என இவற்றின் பின்னாலுள்ள வலி பெரியது. அதைச் சர்வதேசம் கச்சிதமாகவே கண்டுகொண்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேவையின் அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. எனவே, செம்மணிப் புதைகுழியை உச்சபட்ச அளவில் பேசுபொருளாக்கவேண்டிய காலக் கட்டாயக் கடமை எமக்கு இருக்கவேசெய்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதான அம்சங்களில் ஒன்று போர்க்குற்றங்களுக்கான சாட்சியத் திரட்டல்கள். இந்த விடயத்துடன், செம்மணிப் புதைகுழி நெருங்கித் தொடர்புறுகின்றது. எனவே, போர்க்குற்றம் ஒன்றின் வலிமையான சாட்சியமாக இருப்பதற்கான அத்தனை ஏதுநிலைகளும் உள்ள செம்மணிப் புதைகுழியை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனிப்புக்குள் திணித்துவிடவேண்டியது மிகப் பிரதானமான நடவடிக்கையே.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், ஜூன் மாதம் இறுதிப் பகுதியில் இலங்கைக்கு வந்திருந்தார். அவரின் வருகையை முன்னிட்டு செம்மணியில் தொடர் போராட்டங்களும், கண்டன ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், அதற்கு முன்னரும் – அதற்குப் பின்னரும் இந்த விடயம் கிணற்றில்போட்ட கல்லாகத்தான் இருந்தது –இருக்கின்றது என்பதே கசப்பான உண்மை. 'செம்மணியின் உயிர்க்கூடுகள்' தொடர்பில் அரசியற்கட்சிகள் இதுவரை நீதிகோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாகவோ கனதியான அறிக்கைகளை வெளியிட்டதாகவோ இல்லை.

தமிழர் தாயகத்தைச் சூழ்ந்திருக்கும் பல பிரச்சினைகளுக்கு, தமிழ்த் தேசிய அரசியற்கட்சிகளின் தொலைசிந்தனையற்ற செயற்பாடும் முதன்மைக் காரணம். அந்த சபிக்கப்பட்ட போக்கு, செம்மணிப் புதைகுழி விடயத்திலும் தொடர்கின்றது. 'தன்னெழுச்சிப் போராட்டங்களில் தலைநீட்டுவதுதான்' அரசியற்கட்சிகளின் செயற்பாடு அல்ல. அதுதான் முடியுமென்றால், அவ்வாறான பிரதிநிதித்துவங்கள் தமிழ் மக்களுக்குத் தேவையுமல்ல. அதிகாரங்களால் பின்னப்பட்டிருக்கும் கம்பீரக் கதிரைகளை அலங்கரித்தால்போதும் என்பதற்காக தமிழர்கள் நபர்களைத் தேடியதாக வரலாறு இல்லை என்பதை எங்கள் அரசியல்வாதிகள் ஒன்றுக்கு இருமுறை மனதில் இருத்துவது நலம்.




## அரசியல்வாதிகள்மீது 488 முறைப்பாடுகள்!




விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 7

**முன்னாள் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய அரசியற்தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக 488 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று இலஞ்ச,ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

இந்த முறைப்பாடுகள் ஜனாதிபதி செயலகம், அமைச்சுகள் மற்றும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றுக்கு நேரடியாகக் கிடைத்தவையாகும். முறைப்பாடுகள் தினமும் மக்களால் அமைச்சுகளுக்கும் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கும் அனுப்பப்பட்டுவருகின்றன. அவை அனைத்தும் முறையாக விசாரித்துமுடிக்கப்படும் என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-75)

## கைதானார் இனிய பாரதி

கொழும்பு, ஜூலை 7

கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் போர்க்காலத்தில் கருணா அணியின் அம்பாறை மற்றும் திருக்கோவில் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த வருமான கே.புஷ்பகுமார் எனும் இனிய பாரதி விசாரணை வலயத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் மற்றுமொரு அணியினர் இனிய பாரதியைக் கைதுசெய்துள்ளனர். இந்தக் கைது இளைஞர் யுவதிகளைக் கடத்திக் காணாமல் ஆக்கியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளடங்கலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரநேரு படுகொலை தொடர்பில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)




## ஐஸுடன் பொலிஸ் கைது

கொழும்பு, ஜூலை 7

ஐஸ் என்ற போதைப் பொருளை வைத்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மாளிகாவத்தைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் சிறப்பு நடவடிக்கையின் போது போக்குவரத்து தலைமையகத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிளே கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 590 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## குறைந்த விலைக்கு இறக்குமதி அரிசி

கொழும்பு, ஜூலை 7

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி ஒரு கிலோகிராம் 250 ரூபாவுக்கும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள மாபியாக்களை ஒழிக்கும் வகையில், இந்தியாவிலிருந்து கீரிச் சம்பா அரிசியை ஒத்த, ஜீ. ஆர். ரக அரிசியை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## சிறுவன் பலாத்காரம்; பக்கத்துவீட்டார் கைது

கொழும்பு, ஜூலை 7

பத்து வயதுச் சிறுவனைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் அயலவர் ஒருவர் புத்தலப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஊவா பெல்வத்த குமாரகமக் குடியிருப்பில் நடந்துள்ளது. தந்தை வீட்டுக்குத் திரும்பியதும் தனக்கு நேர்ந்ததை தந்தையிடம் சிறுவன் தெரிவித்ததையடுத்து தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ச-இ)



நாளை
செவ்வாய்க்கிழமை - ஆனி 24
08.07.2025
சுபநேரம் : 10.28- 11.58
ராகுகாலம் : 2.58- 4.28



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# இராணுவம் விட்டுவிலகும் இடங்களை அபகரிக்கும் வனவளத்திணைக்களம்

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஜுலை 7**

**முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையப்பிரிவிலுள்ள ஏகம் பைக்குளம் மற்றும் பிராமணகுளம் என்பவற்றை இராணுவம் விடுவிக்கும் நிலையில் அவற்றை வனவளத்திணைக்களத்தினர் ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த குளங்கள் இரண்டும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த நிலையில், தற்போது அப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி வருகின்றனர். இத்தகையசூழலிலேயே குறித்த பகுதியை வனவளத் திணைக்களத்தினர் ஆக்கிரமிக்க நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர். எனவே இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்தி குளங்களை விடுவிப்புச்செய்து மக்களின் விவசாயப் பயன்பாட்டுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச-246)



# விடுதலைப்புலிகள் காலத்து சேரன் அரிசி ஆலை; மீளியக்க நடவடிக்கை

**கிளிநொச்சி, ஜுலை 7**

விடுதலைப்புலிகள் காலத்தில் பயன்பாட்டிலிருந்த சேரன் அரிசி ஆலையை மீண்டும் இயங்கச்செய்து தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் உறுதியளித்துள்ளார்.

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுக்குளம் மற்றும் அதை அண்டிய கிராமங்களில் வசிக்கும் மக்களின் பல்வேறு குறைகளை நிவர்த்திசெய்யும் நோக்கில் கடற்றொழில் அமைச்சர் குறித்த பகுதிக்குக் களவிஜயம் மேற்கொண்டு அங்குள்ள மக்களின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கேட்டறிந்தார்.

இதன்போது போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடும் இளைஞர்கள் அதிலிருந்து மீண்டுவருவதற்கு விளையாட்டு மைதானம் அமைத்துத்தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதற்குக் கடற்றொழில் அமைச்சர் பிரதேச செயலாளரைத் தொடர்புகொண்டு அவர்களால் இனங்காணப்பட்ட காணியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். மேலும் விடுதலைப்புலிகள் காலத்தில் சேரன் அரிசி ஆலையில் 100க்கும் மேற்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டுவந்தனர் என்றும் தற்பொழுது அவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்தநிலையில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் மக்களுக்காக அந்த அரிசி ஆலையை மீளவும் இயக்கி தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ச-113)

# சுகாதாரம் பேணாமை ரூ.10,000 தண்டம்!

**யாழ்ப்பாணம், ஜுலை 7**

தனிநபர் சுகாதாரம் பேணாமை மற்றும் மருத்துவச் சான்றிதழ் இன்றி பணியாளர்களை பணிக்கமர்த்தியிருத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் உணவக உரிமையாளர்கள் இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடியில் உணவு கையாளும் நிலையங்களில் நடத்திய திடீர்ப்பரிசோதனையின்போது அவை கண்டறியப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இரு வர்த்தகர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ச-41-9)




# தொலைத்தொடர்புக் கோபுரம் நிறுவப்படுவதைத் தடுக்கவும்

## கண்டாவளை மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜுலை 7**

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவிப் பகுதியில் ஏ-35 பிரதான வீதிக்கருகே 5ஜிபி தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதனை அவ்விடத்திலிருந்து உடனடியாக அகற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தப் பகுதியில் 5ஜிபி தொலைத்தொடர்புக் கோபுரம் எமக்குத் தேவையில்லை. இதனால் எமது சந்ததி பெரும் பாதிப்பை எதிர்கொள்ளும். எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தொலைத்தொடர்புக் கோபுரத்தை வேறிடத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-113)



# ஈழத்துச் சகோதரிகள் இந்தியாவில் சாதனை

தமிழ்நாட்டில் ஏதிலிகளாக அடைக்கலம் புகுந்து வசித்துவரும் ஈழத்துச் சகோதரிகள் இருவர் நீச்சல் போட்டிகளில் அபார திறமையினை வெளிப்படுத்தி இந்தியாவில் சாதனைபடைத்துள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயக்குமார் அருள்ஜோதி தம்பதியரின் புதல்விகளான தனுஜா மற்றும் டிலாஜினி ஆகியோரே இந்தச்சாதனையைப் படைத்துள்ளனர். தமிழ்நாடு, கிருஸ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூரில் கடந்த மாதம் நடைபெற்ற மாநில நீச்சல் போட்டியில் பெண்கள் பிரிவில் 4 போட்டிகளில் பங்குபற்றிய தனுஜா முதலிடம் பெற்று தங்கப்பதங்களை சுவீகரித்துள்ளார். அதேபோன்று அவரது சகோதரியான டிலாஜினி பத்து வயதுப்பிரிவில் ஐந்து போட்டிகளில் பங்குபற்றி மூன்று தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என ஐந்து பதக்கங்களைத் தனதாக்கியுள்ளார். (ச-100)


# பொங்கல் விழா

**யாழ்ப்பாணம், ஜுலை 7**

தென்புலோலி குரும்பைகட்டி சாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியநிலையில் எதிர்வரும் 19ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. 15 தினங்களாக இடம்பெறும் உற்சவத்தில் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9மணிக்கு வளந்து கட்டல் பூஜையும் மறுநாள் சனிக்கிழமை பகல் 10மணிக்கு பொங்கல் பூஜையும் இடம்பெறும். தொடர்ந்து பிற்பகல் 2மணிக்கு ஆட்டுக் கடா, கோழி என்பன ஏலம் விடப்படும்.

19ஆம் திகதி சனிக்கிழமை காலை 7மணிக்கு 1008 சங்காபிஷேகம் ஆரம்பமாகி நண்பகல் 12மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 5மணிக்கு விசேட பூஜையும் சுவாமி சாமுண்டிகாதேவி சமேத ஞான வைரவப் பெருமான் உள்வீதி வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (ச-41-80)



# நல்லூர்ப் பிரதேசசபையால் சிரமதானப்பணி

**யாழ்ப்பாணம், ஜுலை 7**

நல்லூர்ப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட கவரக்கூடிய நிறுவன முறையை உருவாக்கும் சிரமதான நிகழ்வு யாழ். திருநெல்வேலி பொதுச்சந்தையைச் சூழவுள்ள பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நல்லூர்ப் பிரதேசசபையின் உப தவிசாளர் இ.ஜெயகரன், பிரதேசசபையின் உறுப்பினர்கள், நல்லூர்ப் பிரதேசசபையின் அலுவலக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரியாலை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**கணக்காளர் நிரந்தர பதவி**

**பின்வரும் நிபந்தனைகளுக்கமைய கணக்காளர் (104/10) நிரந்தர பதவிக்கு வெளிவாரியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**01. பதவி : கணக்காளர் (104/10)**
**02. வெற்றிடம் : 01**
**03. சம்பள அளவு : 34745-445×10 - 450×10 - 43695.00**
**416940-5340×10 - 5400×10 - 524340.00**

A. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்ட பதவியில் கணக்கு பதிவாளர்/ கணக்கு/ கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பள திட்டப் பதவியில் கணக்கு பதிவாளர் கணக்கு/ கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

B. இலங்கை தொழிற் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா / இதற்கு சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

அல்லது

C. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டு கால அனுபவம் / அங்கீகாரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவி யொன்றில் 02 ஆண்டு கால அனுபவம்,

க.பொ.த.உயதரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டு கால அனுபவம் அங்கீகாரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவி யொன்றில் 03 ஆண்டு கால அனுபவம்

### குறிப்பு :-

1. விண்ணப்பப் படிவங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. வயதெல்லை 18-45 கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு இவ் வயது எல்லை ஏற்புடையதல்ல. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
3. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்கை செலவு படியும் வழங்கப்படும்.
4. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
5. விண்ணப்பங்கள் யாவும் 22.07.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இலக்கம், 15 நடுதெருலேன், அரியாலை என்ற முகவரிக்கு பதிவு தபாலிலோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

**தலைவர்**
**07.07.2025**

(CS 30199) E

# சஜித்தை நம்பி நாம் இல்லை!

தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவிப்பு

சஜித் பிரேமதாஸவுக்கு எமது அரசியல் எதிர்காலத்தை எழுதிக்கொடுக்கவில்லை. அவர் ஜனாதிபதியாகும்வரை எம்மால் காத்திருக்கவும் முடியாது. அரசாங்கம் பேச்சு நடத்தினால் பொதுநலன் அடிப்படையில் செயற்பட முடியும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவரது அரசியல் வாழ்வென்பது வேறு. எமது கட்சி வேறு கட்சியாகும். எமது எதிர்காலத்தை சஜித்துக்கு எழுதி கொடுக்கவில்லை. சஜித் எமது தலைவர் அல்லர். அவர் கூட்டணி தலைவர். இந்த அரசாங்கம் பேச்சு நடத்தினால் பொதுநலன் அடிப்படையில் இணைந்து செயற்பட முடியும். மக்கள் நல்வாழ்வு தான் எமக்கு முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## கடை வாடகைக்கு

யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் கந்தர்மடம், அரசடி வீதியில் உள்ள கடைத் தொகுதியில் ஒரு கடை உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **077 905 0319**

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு...

- **விவரணப் பகுதி ஆசிரியர் (Description Editor)**
- **விளையாட்டுச்செய்தி ஆசிரியர் (Sports News Editor)**
- **செய்தியாளர்கள் (Reporters)**
- **உதவி ஆசிரியர்கள் (Assistant Editors)**

ஆகியோர் தேவை
அனுபவமும் ஆற்றலும் கொண்டோருக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு: mmslanka@gmail.com

## மாவிட்டபுரம் குமாரகோவில் தருமபரிபாலன சபைப் பொதுக்கூட்டம்

**மேற்படி ஆலயப்பொதுக்கூட்டம் எதிர்வரும் (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. புதிய அங்கத்தவர் தெரிவு, ஆலய அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல், என்பன இடம் பெறவுள்ளதால் அனைத்து அடியார்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**தருமபரிபாலன சபையினர்,**
**குமாரகோவில்,**
**மாவிட்டபுரம்.**



## பொதுக்கூட்ட அறிவித்தல்
## கொல்லங்கழட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம் தெல்லிப்பழை

மேற்படி ஆலயத்தின் நிர்வாக கட்டமைப்பை ஒழுங்குபடுத்தும் முகமாகவும் கடந்த காலத்தில் நடந்த விடயங்கள் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கவும் பிரதேச மக்களால் பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பிரதேச செயலாளரின் வழிகாட்டலிலும் மேற்பார்வையிலும் பொதுக் கூட்டம் கூட பொது மக்களால் தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்க மேற்படி கூட்டமானது இடம்பெற உள்ளது.

**இடம் : கொல்லங்கழட்டி வீரகத்தி விநாயகர் ஆலய முற்றல்.**
**காலம் : 2025.07.20 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : காலை 9.00 மணி**

பிரதேச மக்கள் மற்றும் வீரகத்தி விநாயக ஆலய அடியார்கள் உபயகாரர்கள் ஆலய நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது சமூகமளித்து அலயத்தின் எதிர்காலம் மேன்பட ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொதுமக்கள் சார்பாக**
**நடராஜா ஜெயகரன்**
**கொல்லங்கழட்டி**

(CS 58792) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 11 . 1948



மறைவு
05 . 07 . 2025

### இராமநாதன் நவரத்தினதேவி

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் நவரத்தினதேவி அவர்கள் கடந்த (05.07.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமகுரு-இராசம்மா தம்பதியரின் இரண்டாவது புதல்வியும், கந்தையா இராமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.07.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 616 5387.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

தீவக வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

| இல | பெயர் | வகை |
|---|---|---|
| 01 | யா/ எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் | II |
| 03 | யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | II |
| 02 | யா/ வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் | III |
| 04 | யா/ சரவணை சின்னமடு றோ.க.த.க பாடசாலை | III |
| 05 | யா/ புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி த.க வித்தியாலயம் | III |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் :-**

- விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்
- Type -II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இலங்கை அதிபர் சேவை தரம் -II இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பம் கிடைக்கப் பெறாத விடத்து மட்டும் அல்லது தெரிவுகள் எவையும் இடம்பெறாவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம் -III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.
- Type - III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப்பரிவில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 2025.07.17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், குறிகட்டுவான் வீதி, வேலணை"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பணிப்பாளர்**

(CR/45190) J-1

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியின் சிவஞானசோதி கலையரங்க மண்டபத்தில் இடம்பெறவுள் ளன. கல்லூரி முதல்வர் த. தயானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளு நர்நா. வேதநாயகன், சிறப்பு அதிதியாக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பா ளர் திருமதி ஜமுனா ராஜசிலன், கௌரவ அதிதியாக கொழும்பு பம்பலப்பிட்டி இந் துக்கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் க.நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-41-63)

## வேலைக்கு ஆள் தேவை
(Data Entry)

- திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதியை அண்மித்து வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- கல்வித்தகமை O/L-தமிழ், கணிதம், ஆங்கிலம்
- கணனி அறிவு (ஓரளவு) கட்டாயம் தேவை.

வயதெல்லை 23 க்கு உட்பட்ட ஆண்கள் மட்டும்.

தொடர்புகளுக்கு: 077 663 6384

## மரண அறிவித்தல்



தோற்றம்
17 . 07 . 1942

இறப்பு
04 . 07 . 2025

### சண்முகம் ராசம்மா

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் ராசம்மா அவர்கள் கடந்த (04.07.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

காலஞ்சென்ற சிதம்பரநாதர் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற கணபதிபிள்ளையின் அன்பு சகோதரியும், கனேஸ்வரியின் அன்பு மைத்துனியும், சுப்பிரமணியம் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), பாலசந்திரன் (சுவிடன்), தவலிங்கம், தங்கேஸ்வரி, சிவசக்தி (கனடா), ஈஸ்வரன் (நோர்வே), முகுந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயகுமாரி (கனடா), ஸ்ரீபாலச்சந்திரன் (கனடா), அனுஷா (சுவிடன்), ஜெயகுமாரி, ஜெயரூபன், ஜீவேஸ்வரன் (கனடா), அனுராதா (நோர்வே), துசியந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுவேகா, சுவேன், அஜந்தா, அபிராமி, சண்முகப்பிரியா, யுகன்யா, துசாந்தன், கார்த்திகா, மதுஷா, சிவதாஸ், சங்கவி, வினோஜன், காயத்திரி, நிரோஜன், அபிஷன், அபிநயன், அக்ஷிதா, அன்சிகா, அருணிகா, அக்ஷயா ஆகியோரின் அன்பு பேரனும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2025) செவ்வாய்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 476 6935**
**077 858 3803**

(CS 58791) E

## மரண அறிவித்தல்



எம்முடன்
30 . 06 . 1930

இறையுடன்
06 . 07 . 2025

### திருமதி தணிகாசலம் பரமேஸ்வரி

நாவலர்மடம், நவிண்டில், கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தணிகாசலம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (ஆராய்ச்சியார்), செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தணிகாசலம் (ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமலிங்கம் பாக்கியம் அவர்களின் அன்புச்சகோதரியும், நிர்மலா (லண்டன்), சுசீலா (ஓய்வு பெற்ற ஆசிரியை), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோகநாதன் (லண்டன்), கிருஷ்ணதாசன் (ஓய்வு பெற்ற உதவி அத்தியட்சகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜீவன், சார்லட், நிரூஷா - மத்யூ, மயூரன் - வர்ணிகா, மாதங்கி - துமிலன், சரண்யா, சங்கர் ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும், அமாயா, மிலா, நோவா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2025) திங்கட்கிழமை காலை 07.30 மணியளவில் நாவலர்மடத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் எள்ளாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
(077 302 1256)

(CS 58790) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுவேலி மற்றும் சங்கானை
பகுதிகளுக்கான அபிவிருத்தி
கைக்கு எட்டும் தூரத்தில்...

பிரதேசவாசிகளுக்கான நிதியியல் சேவையில் தீர்வுகளை வழங்கிட
LOLC பினான்ஸ் நிறுவனத்தின் புதிய இரு கிளைகள்
யாழ் மாவட்டத்தின் **அச்சுவேலி** மற்றும் **சங்கானை** பிரதேசங்களில்
இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

பரிந்துரைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு

www.lolcfinance.com
facebook.com/LOLCFinanceplc
instagram.com/lolc.finance
x.com/LOLCFinance
youtube.com/@lolcfinance

2001 டிசம்பர் 13 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட LOLC பினான்ஸ் PLC, 2011 இல 42 எனும் நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற Lanka Rating நிறுவனத்தின் A (Positive) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது. இலங்கை வைப்புகள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் தகைமை பெற்ற வைப்புகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால் ஒரு வைப்பாளருக்கு 1,100,000 வரை உயர் நட்டாட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

LOLC பினான்ஸ்

# செம்மணிப் புதைகுழிக்கு நீதி மிகவும் அவசியம்!



யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழி விடயத்தில் சர்வதேச விசாரணைகள் அவசரமாகவும், அவசியமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கனடாவின் ஒன்றாரியோ மாகாண அமைச்சர் விஜய் தணிகாசலம் வலியுறுத்தியுள்ளார்.

செம்மணிப் பகுதியில் அடையாளங்காணப்பட்ட மனிதப் புதைகுழியை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் பார்வையிட்டதைத் தொடர்ந்து. இந்த விடயம் சர்வதேசத்தின் கவனத்தை வெகுவாகக் குவித்துள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, செம்மணிப் புதைகுழி விடயத்துக்கு நீதி விரைவாக வழங்கப்படவேண்டும் என விஜய் தணிகாசலம் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

செம்மணியில் அவதானிக்கப்படும் ஒவ்வொரு மனிதச் சிதிலமும் பெரும் வலியைத் தருகின்றது. அவை மீண்டும் காயங்களை ஏற்படுத்துவதுடன் நீதிக்கான கோரிக்கைகளையும் தூண்டுகின்றன.

இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள குற்றவாளிகள் தங்கள்மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்கக்கூடாது. அதற்கு அனுமதிக்கவும் முடியாது.

ஆதலால், சர்வதேச விசாரணை ஊடாக செம்மணிப் புதைகுழிக்கு நீதி வழங்கப்படவேண்டும். அது அவசரமும் அவசியமுமாகும் -என்றார். (ம-இ)

## திருமஞ்சத்தில் நயினை அம்மன்



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த பெருவிழாவின் திருமஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மிகச் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. இதன்போது மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் நாகபூஷணி அம்மன் அடியவர்கள் புடைசூழ வீதி உலா வந்தார். (ச-66)



# செம்மணிப் புதைகுழிக்கு சர்வதேச நீதிவேண்டும்

### நடிகர் சத்தியராஜ் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 7

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இருந்து பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்றன. இதனைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாகவும், கோபமாகவும், அதிர்ச்சியை அளிக்கக்கூடிய வகையிலும் இருக்கிறது. இந்தக் கொடிய செயலுக்கு சர்வதேச நீதிமன்றத்திடமே நீதியைப் பெறவேண்டும் என்று தென்னிந்தியப் பிரபல நடிகர் சத்தியராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பகுதியானது யுத்த காலப்பகுதியில் சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியாகக் கூறப்படுகிறது. அந்த மயானத்தில் கடந்த காலத்தில் சடலங்கள் எரிக்கப்பட்டனவேதவிர புதைக்கப்படுவதில்லை. இளைஞர், யுவதிகள் மற்றும் சிறுவர்கள் கொன்றுபுதைக்கப்பட்டுள்ளார்கள். இவை அனைத்தும் கொஞ்சம்கூட மனிதாபிமானமற்ற செயல்.

இந்தச் செயல்களைச் செய்தவர்களிடமே நீதியைக் கேட்டால் அது கிடைக்காது. அதனால் சர்வதேச நீதிமன்றத்துக்கே இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்ல வேண்டும். இந்தக் கொடூரமான செயலை உலக நாடுகள் அனைத்தினதும் கவனத்துக்குக் கொண்டு செல்லவேண்டும். அதற்குத் தமிழர்களாகிய நாங்கள் தான் பாடுபடவேண்டும்- என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மலர்வு 24 . 12 . 1953



உதிர்வு 06 . 07 . 2025

**சின்னத்தம்பி-பாலையா**

**(பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர்)**

கமலசோதியின் (சூஞ்சு) கணவரும், நாகரத்தினம், பொன்னுத்துரை, பூமணி, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தவமணி, பவளம் மற்றும் சின்னமலர், குலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் வில்சன், விஜிதா, காலஞ்சென்ற சுகிர்தன் மற்றும் பிரகாஷ், நிருஜன், தர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரூபன், மயூரி, சர்மினி, அபிலாஷா, சாமினி ஆகியோரின் மாமனாரும், திஷானா, லக்சிகன், தீபிஜகன், வேக்ஷன், ஜனகீதன், தேஷ்னா, விஷாலினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2025) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கும்பலை,**
**அளவெட்டி கிழக்கு**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 138 7283**

# மேய்ச்சல் தரவையின்றி வன்னியில் இடர்நிலை!

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, ஜூலை 7

வன்னிப் பகுதிகளில் கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரவை இன்மை பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. குறித்த விடயத்தை அமைச்சரவைக்குக் கொண்டுசென்று தீர்மானங்களை நிறைவேற்றி கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேய்ச்சல் தரவை இன்றி கால்நடைகள் மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றன. அத்தோடு வீதிகள் முழுவதும் கால்நடைகள் காணப்படுவதால் பொதுமக்களும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

புள்ளிவிபரங்களின்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 389 மக்களுக்குக் காணியில்லாத நிலை காணப்படுகின்றது. வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் நிலப்பரப்பில் கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டமே காணப்படுகின்றது.

மேய்ச்சல் தரவை என்பது கட்டாயத் தேவையாகக் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளும் மன்னாரில் ஒரு இலட்சத்து 40ஆயிரம் வரையிலும் வவுனியாவில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வரையிலும் கால்நடைகள் காணப்படுகின்றன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவர், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவையைப் பெற்றுத் தருவதற்குக் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (ச-26.246)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி வசந்தராசா சந்திரலீலா**

தோப்பு, அச்சுவேலியை சேர்ந்த வசந்தராசா சந்திரலீலா அவர்கள் நேற்று (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன்-அன்னலெட்சுமி தம்பதியின் சிரேஷ்ட மகளும், வசந்தராசா அவர்களின் அன்பு மனைவியும், சந்திரதாஸ், சந்திரஸ்ரீ, சந்திரலேகா (கனடா). சந்திரபாலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாகித்தியன், சகானன், கோபிகா, மதுஷிகன், மதுசகான் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (07.07.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராஜ வீதி,**
**தோப்பு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 06 . 1948



மறைவு 06 . 07 . 2025

**திருமதி செல்வலிங்கம் தர்மதேவி**

அல்வாய் புளியடியை பிறப்பிடமாகவும் அல்வாய் மலர்மஹாலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வலிங்கம் தர்மதேவி அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (06.07.2025) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிதுரை - தங்கம்மா தம்பதியரின் இளையமகளும், காலஞ்சென்றவர்களான செல்வராசா - சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்வராசா செல்வலிங்கம் (கிராம சேவையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், துரைராசா - நாகேஸ்வரி அவர்களின் அன்பு சகோதரியும், சாம்பசிவம் (ஆசிரியர் யா/ வாயாவிளான் மத்திய கல்லூரி), சரசா, சர்மிளா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச சபை கரவெட்டி), றம்மியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் சுதேச மருத்துவ திணைக்களம் பருத்தித்துறை), தனேந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும், சுபாஜினி (ஆசிரியர் யா/ வாயாவிளான் றோ.த.க), சிவசங்கர் (இ.போ.ச பருத்தித்துறை), தயேந்திரன் (மாவட்ட கண்காணிப்பு முகாமையாளர் மாவட்ட செயலகம் முல்லைத்தீவு), பாக்கியநேசன் (இந்தியத்துணைத் தூதரகம்), கஜிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மல்லிகாதேவி, சத்தியலிங்கம் (பொறியியலாளர் london), றஞ்சினிதேவி (ஆசிரியை), விஜயா, சாந்தலிங்கம் (france), சாந்தினி (swiss), அனுஷா (london), சயந்தலிங்கம் (இ.போ.ச பருத்திதுறை) ஆகியோரின் சிறிய தாயாரும், யோகலிங்கம் (இளைப்பாறிய சுங்க பிரதிப்பணிப்பாளர்), காலஞ்சென்ற அசோகலிங்கம் (ஆசிரியர்), சந்திரலிங்கம் (கனடா), ஆனந்தலிங்கம் (கனடா), ரஜனி (கனடா), சோதிலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர் கொழும்பு), அட்ஜெயலிங்கம் (ஆசிரியர் - யா/அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலை), குமாரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சுபேந்திரலிங்கம், பத்மலிங்கம் (france), இந்திரலிங்கம் (வைத்தியர் கொழும்பு), சிவாஜினி (ஆசிரியர்), இராஜேந்திரலிங்கம் (france), ஆகியோரின் மைத்துனியுமாவார், அபிஷனா, அபிராம், சுவேதா, அஸ்விதா, சகீர்ஷனன், அக்ஷியாணி, கஜோரிக்கா, கிஷோபிகா, மிதானிகா, நாணிலா ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை (08.07.2025) பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செல்வகனம்,**
**அல்வாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**(சாம்பசிவம் - மகன்)**
**076 280 3079**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகர் கிருஷ்ணகுமாரின் இறுதிக்கிரியை நேற்று

கிளிநொச்சி, ஜூலை 7

போர்க்கால ஊடகவியலாளர்களில் ஒருவரான நடராசா கிருஷ்ணகுமாரின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. நிகழ்வில் ஊடகவியலாளர்கள் ,ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். 1999 இல் புலிகளின் குரல் வானொலி மற்றும் ஈழநாதம் செய்தியாளராக இணைந்த கிருஷ்ணகுமார் போர் மிகத் தீவிரம் பெற்றிருந்தபோதும் களச்செய்தி சேகரிப்பில் செயற்பட்டிருந்தார். உதயன் உட்பட்ட பல ஊடகங்களுக்கான செய்தியாளராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-35)



# மனித உரிமை விழிப்புணர்வு பாடசாலைமட்ட நிகழ்வுகள்



சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டில், பாடசாலை மட்டங்களில் நடத்தப்பட்ட மனித உரிமை தொடர்பான கட்டுரைப்போட்டி மற்றும் பட்டிமன்றப் போட்டி களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ்.கனகரட்ணம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வை எவ்.எச்.ஆர்.ஓ. அமைப்பின் யாழ்.பிராந்திய ஒருங்கிணைப்பாளர் யோசப் பாலா மற்றும் மதிகரன் ஆகியோர் இணைந்து ஒருங்கமைத்திருந்தனர். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலைமதன் மற்றும் சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாணப் பணிப்பாளர் கலாநிதி. ஆர்.எம்.புண்ணியமூர்த்தி, மனித சுதந்திர அமைப்பின் அங்கத்தவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது "மனித உரிமை பேணப்படுகின்றதா? இல்லையா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. (ச-41)

## சாதக...

கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கம் தீர்மானித்தது. அதன்படி இலங்கைக்கு 44 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த வரி விதிப்புப் பின்னர் 90 நாள்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

இந்தநிலையில் இலங்கை உட்படப் பல நாடுகள் அமெரிக்காவுடன் வர்த்தக ஒத்துழைப்பு மற்றும் வரி குறைப்புப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தன. அமெரிக்கா வழங்கியிருந்த 90 நாள்களுக்கு கால அவகாசம் எதிர்வரும் 9ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகள் சாதக நிலையை எட்டியுள்ளது என்று வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## ஐ.எம்.எப். உதவியின்...

பெறப்பட்டுள்ளன. ஜூலை 3 ஆம் திகதி 5ஆவது தவணையாக 350 மில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதிகள் தொடர்பான தற்போதைய நிலைமைகளைத் தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். (அ-எ-இ)

## வடக்கு...

கப்பட்டு வந்த அதிசொகுசு கடுகதி ரயில், இன்று திங்கட்கிழமை முதல் கல்கிஸை மற்றும் காங்கேசன்துறை இடையே தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்கிஸை மற்றும் காங்கேசன்துறை இடையே தினமும் இயக்கப்படவுள்ள இந்த ரயில் கல்கிஸையில் இருந்து அதிகாலை 5.15 மணிக்குப் புறப்பட்டு மதியம் 12.13 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும். காங்கேசன்துறையில் இருந்து மதியம் 1.50 மணிக்கு புறப்படும் ரயில், இரவு 8.58 மணிக்கு கல்கிஸையைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கு தினமும் அதிகாலை 5.45 மணிக்கு இயக்கப்படும் யாழ்தேவி ரயில் புறப்படும் நேரமும் இன்று முதல் திருத்தப்படவுள்ளது. கொழும்பு கோட்டையில் இருந்து ரயில் புறப்படும் நேரம் காலை 6.40 மணியாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்தேவி ரயிலுக்கு முன்பதிவு செய்த பயணிகள் திருத்தப்பட்ட நேரத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று ரயில்வே திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ-எ-26)

## ஐ.எம்.எப்...

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின் 4 ஆம் கட்ட மீளாய்வு தொடர்பில் நாணய நிதிய அதிகாரிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உத்தியோகத்தர்மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. அதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்தது.

அதன்பின்னர் கடந்த வியாழன்று வொஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே எவான் பபஜோர்ஜியோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் அரச நிதியை வலுப்படுத்துவதற்கும், மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்வதற்குமான முயற்சிகள் இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டத்தின் மிக முக்கியமான அங்கமாகும். அந்தச் செயற்திட்டத்தின் பிரகாரமும், அரசாங்கத்தின் இலக்குகளுக்கு அமைவாகவும் வருமானம், செலவினங்கள் உள்ளிட்ட சகல கூறுகளும் உரியவாறு அடையப்படுவதை நாம் உறுதிசெய்வோம். அதேவேளை ஆட்சியியல் மறுசீரமைப்புக்கள், நாணயக்கொள்கை மற்றும் கையிருப்பு முகாமைத்துவம் என்பவற்றில்

முன்னெடுக்கப்படவேண்டிய சில முக்கியமான விடயங்கள் காணப்படுகின்றன. அது தொடர்பாக இலங்கையுடன் கலந்துரையாடப்படும். அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டமைப்புக்களின் மறுசீரமைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் - என்றார். (அ-எ-இ)

## தூசு...

பிரிவு மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு போன்றவற்றில் கடந்த காலங்களில் மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்படாது கிடப்பில் போடப்பட்டிருந்த முறைப்பாட்டு கோவைகளே விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கம் தீவிரமாக உள்ளது என்றும், அதன் தொடர்ச்சியாகவே கிடப்பில் போடப்பட்ட கோவைகள் விசாரணைக்கு எடுக்கப்படுகின்றன என்றும் அரசாங்கத் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கையால் பொதுமக்கள் முறைப்பாடுகளைத் தயக்கமின்றி முன்வைக்கும் சூழல் உருவாக்கப்படும் என்றும் அரசாங்கத் தரப்புகள் தெரிவித்துள்ளன. (அ-எ-75)

## செம்மணிப்...

செம்மணி, சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித என்புத் தொகுதிகள் இனங்காணப்பட்ட நிலையில் அங்கு தற்போது இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 11ஆம் நாள் அகழ்வுகள் நேற்று நடைபெற்ற நிலையில், இரு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அகழ்வு நடவடிக்கைகளில் இதுவரை 47 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 44 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வு நடவடிக்கைகள் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்படுகின்றன. துறைசார் நிபுணரும், பேராசிரியருமான சேமதேவாவின் தலைமையிலான குழு அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அங்கு முன்னிலையாகி வருகின்றனர். (அ-எ-26)

## துப்புரவு...

கள் இனங்காணப்பட்டுள்ளன. மனித என்பு எச்சங்கள் தென்பட்ட பகுதியில் தற்போது அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 47 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 11ஆம் நாளான நேற்றும் இரு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

இந்தநிலையில், ஏற்கனவே அகழ்வு நடைபெறும் பகுதிக்கு வெள்ள நீர் செல்வதைத் தடுக்கும் நோக்கில், அகழ்வு நடைபெறும் இடத்துக்கு அருகில் நேற்றுத் துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்போது அங்கும் மனித என்பு எச்சங்கள் தென்பட்டதை அடுத்து அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

என்பு எச்சங்கள் தென்பட்டதை அடுத்து, ஆய்வுகளின் பின்னர் அங்கும் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகின்றது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும். உறவினர்கள்வகையில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்கு புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படும். பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், சக பணியாளர்கள் உதவி செய்வார்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுகமான ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும்.

**விருச்சிகம்:** காலையில்வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும்.

**தனுசு:** தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும். உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவர் தேவையை மற்றவர் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவுசெய்யவேண்டிவரும். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது அவசியம்.

# தமிழ் அரசியற்கைதிகளின் விடியலுக்கு அணிதிரள்வோம்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு அழைப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 7**

**சிறைகளுக்குள் கொலைசெய்யப்பட்ட தமிழ் அரசியற்கைதிகளை நினைவுகூர்ந்து சிறையிலிருந்து விடுவிக்கப்படாத உறவுகளின் விடுதலைவேண்டி அணிதிரள்வோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.**

யாழ். ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 24ஆம் 25ஆம் திகதிகளில் ஆம் திகதிகளில், யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்கா சுற்றயலில் இடம்பெறும் இந்த நினைவேந்தல் செயற்பாட்டில் சமூக உணர்வு கொண்ட அனைத்துத்தரப்பினரும் தவறாது பங்கேற்று ஒன்றிணைந்து குரல்களை உயர்த்தி உறவுகளின் விடுதலைக்கு அணிதிரண்டு வலுச்சேர்ப்போம்.

இலங்கை, ஜனநாயக சோசலிசக் குடியரசு எனும் பெயரைத் தாங்கி நிற்கிறது. ஆனாலும் இந்த ஜனநாயக சோசலிசம் வெளிப்படுத்தும் விழுமியங்களுக்கு மாறாக ஒடுக்கும் அரசாகவே இவ்வரசு பரிணமித்துள்ளது. இந்த அரசினது இரும்புச் சிறைகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த உயிரிழந்த எமது உறவுகளான தமிழ் அரசியற்கைதிகளை உணர்வுபூர்வமாக மனங்கொள்ளவேண்டியது தமிழ் மக்களாகிய நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்றவற்றின்கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியற்கைதிகளை நாம் மறந்துவிடலாகாது. 30 ஆண்டுகள் கடந்தும் விடுதலை இன்றி இன்றுவரை சிறைக்கூடங்களுக்குள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகளின் சுதந்திர விடியலுக்காக கரம் கோர்த்து குரலுயர்த்த அனைவரும் ஒன்றிணையவேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும்- என்றார். (ச)

# 'நீதம்' சட்ட இதழ் சனியன்று வெளியீடு

*யாழ்ப்பாணம், ஜூலை 7*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுக்கும் 'நீதம்' சட்ட இதழின் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக்கழக கைலாசாபதி கலையரங்கில் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் உயர்நீதிமன்ற நீதியரசர் குமுதினி விக்கிரமசிங்கே பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் கௌரவ விருந்தினராகவும் பங்கேற்கவுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலரும் பங்கேற்கவுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும் நீதம் இதழ் வெளியிடப்பட்டுவருவதுடன் இம்முறை ஒன்பதாவது தடவையாக வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-20-66)


**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு**

இயக்குனர் கலைமாமணி. வில்லிசைச் சக்கரவர்த்தி டாக்டர் சாம்பசிவஸ்ரீ **சோமஸ்கந்த குருஜி** அவர்கள் கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். உங்கள் ஆலய உற்சவங்கள். கலைவிழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகள் பல்சுவை நகைச்சுவையுடன் வில்லுப்பாட்டு நிகழ்வுகளை காண அழைத்து மகிழுங்கள்

**13.07.2025 வரை**

தொடர்புகளுக்கு: 075 041 0216

(CS 301981) E

**வாகன சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றின் நிர்வாக முகாமையாளருக்கு 40 வயதுக்கு மேற்பட்ட வாகன சாரதி தேவை.

தேவையேற்படின் தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.

**அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.**



தொடர்பு:- 077 120 9998

**பண வசூலிப்பாளர் தேவை**



யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு

**பண வசூலிப்பாளர் தேவை.**

தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 07.07.2025 திங்கட்கிழமை மு.ப 9.00 - பி.ப 02.00 வரை நேரில் சமூகம் தரவும்.

உதயன்

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org